


விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், ஆனைக்குட்டம் கிராமத்தில் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் ரூ.40.50 இலட்சம் மதிப்பிலான புதிய கால்நடை மருந்தக கட்டடத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் வீ.ப.ஜெயசீலன், தலைமையில் விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் முன்னிலையில், நிதி மற்றும் மனித வள மேலாண்மைத்துறை மற்றும் மின்துறை அமைச்சர் தங்கம்தென்னரசு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார் .



சிவகங்கை மாவட்டம், கல்லல் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மானகிரி செட்டிநாடு பப்ளிக் பள்ளியில்,கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனையர்களுக்கு கேடயம், பாராட்டுச் சான்றிதழ் மற்றும் ஊக்கத் தொகையினை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஆஷா அஜீத், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.மாங்குடி (காரைக்குடி) திருமதி. ஆ.தமிழரசி ரவிக்குமார், (மானாமதுரை), கல்லல் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி சொர்ணம் அசோகன், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் சி.ரமேஷ்கண்ணன், மானகிரி செட்டிநாடு பப்ளிக் பள்ளி தலைவர் சுப.குமரேசன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் திருமதி மஞ்சரி லெட்சுமணன் உட்பட பலர் உள்ளனர்.

### நூற்றாண்டு விழாக் காணும்

# முத்தமிழறிஞர் கலைஞரின் புகழ் இமயம்போல் உயர்ந்து நிற்கும்!



**த**ன் வாழ்நாளில் எழுதிக் குவித்த இலக்கியக் கருவூலங்களுக்கு பெற்ற பணத்தைக் கொண்டு அறக்கட்டளைகள் நிறுவி, அதன்மூலம் நலிந்தோர் மருத்துவம் மற்றும் கல்வி உதவி பெறவும், முற்போக்கு - பகுத்தறிவு எழுத்தாளர்களுக்கும், தமிழ் செம்மொழி ஆய்வுக்கு சீரியமுறையில் தொண்டாற்றும் அறிஞர்களுக்கும் பொற்கிழி வழங்கி தமிழ் வளர்ச்சிக்கு தொண்டாற்றிய ஒப்புயர்வற்ற தமிழினத் தலைவர் கலைஞர் ஆவார். உண்மை ! வெறும் புகழ்ச்சியில்லை.

1. "கலைஞர் அறக்கட்டளை" வைப்பு நிதி ரூ. 5 கோடி நலிந்தோர் மருத்துவம் மற்றும் கல்வி உதவித்தொகை (வைப்பு நிதியில் பெறும் வட்டியிலிருந்து வழங்கப்படுகிறது.) சுமார் 18 ஆண்டுகளில் பல்லாயிரக்கணக்கான ஏழை மக்கள் பெற்ற உதவித் தொகை.. ரூ. 5 கோடியே 73 இலட்சத்து 90 ஆயிரம் ஆகும்.

2. "கலைஞர் கருணாநிதி பொற்கிழி அறக் கட்டளை" 2007 ஆம் ஆண்டுமுதல் ரூ.1 கோடி வைப்பு நிதி தென்னிந்திய விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கம் மூலம். இளைஞர்களின் எதிர்கால வளர்ச்சிக்கு உதவிடும் பகுத்தறிவு சிந்தனைகளை வளர்க்கும்சிறந்த நூல்களை எழுதி வெளியிடும் பத்து எழுத்தாளர்களுக்கு ரூபாய் ஒரு இலட்சம் வீதம் பொற்கிழி ஆண்டு தோறும் அரசுநடத்தும் புத்தகத் திருவிழாவில் வழங்கப்பட்டு வருகிறது.

3." கலைஞர் மு. கருணாநிதி செம்மொழி அறக் கட்டளை" 2008 ஆம் ஆண்டு வைப்பு நிதி ரூ.1 கோடி (ஒன்றிய அரசின்) செம்மொழி தமிழாய்வு மையம் மூலம்) "கலைஞர் மு.கருணாநிதி செம்மொழி தமிழ் விருது" ஆண்டுதோறும் ஒருவருக்கு ரூ.10 இலட்சம், தகுதிச் சான்றும் வழங்கப்படுகிறது.

கோவை மாநகரில் 2010 சூன் 23 முதல் 27வரை உலகே கண்டு வியந்து பாராட்டிய வண்ணம் முத்தமிழறிஞர் முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற "உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டில் ஒன்றிய (இந்திய) குடியரசுத் தலைவர் மேதகு பிரதிபா பாட்டில் அவர்கள், பின்லாந்த் நாட்டு அறிஞர் பேராசிரியர் அஸ்கோ பர்போலா அவர்களுக்கு

"கலைஞர் மு. கருணாநிதி செம்மொழி தமிழ் விருது" ரூ.10 இலட்சம் பொற்கிழி வழங்கி சிறப்பித்தார்கள். தகுதிச் சான்றிதழை இனமானப் பேராசிரியர் அவர்கள் வழங்கினார்கள். (சிந்து வெளி எழுத்துக்கள் ஹரப்பா எழுத்துக்கள் ஐரோப்பிய மொழியல்ல, ஆரிய மொழியும் அன்று. "தென்னிந்திய திராவிட மொழியே" என்று ஆய்ந்து அறிந்து, உலகம் ஏற்றுக் கொள்ளும் வகையில் தெளிவு படுத்திய அறிஞர்தான் பேராசிரியர் அஸ்கோ பர்போலா ஆவார்.)

" தன் உழைப்பால் பெற்ற வருமானத்தில் ரூ.7 கோடிக்கு அறக்கட்டளைகள் நிறவி, தமிழ் சமுதாயத்திற்கு உதவிக் கரம் நீட்டிய உலகில் ஒரே தலைவர் கலைஞர் ஒருவரே!" நின் புகழ் தமிழ் நிலம் உள்ளளவும் இமயம்போல் உயர்ந்து நிற்கும்.

**க.வை. இராமகிருட்டினன்**
செயலாளர்
அய்யன் திருவள்ளுவர்
இலக்கிய மன்றம்
மதுரை.

### கடலூர் மாவட்டத்தில்

# ரூ.121.64 கோடி மதிப்பீட்டில் முதல்வரின் கிராம சாலை மேம்பாட்டு திட்டம்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் துவக்கி வைத்தார்!

கடலூர், ஜூன் 20 -

கடலூர் மாவட்டம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் வாயிலாக முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களில் சாலை மேம்பாட்டுப்பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர். அ. அருண்தம்புராஜ், முன்னிலையில் வேளாண்மைஉழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தொடக்கி வைத்தார்.

கடலூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பச்சையாங்குப்பம் பகுதியில் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.75.80 இலட்சம் மதிப்பீட்டில் பச்சையாங்குப்பம் முதல் தைக்கால் தோணிதுரை வரை 1.250கி.மீ நீளத்திற்கான சாலை மேம்பாட்டுப் பணியினையும், குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கருங்குழி பகுதியில் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.207.70 இலட்சம் மதிப்பீட்டில் கருங்குழி காலணி முதல் வள்ளலார் சபை வரை 2.630 கி.மீ நீளத்திற்கான சாலை மேம்பாட்டுப்பணியினையும், மேல்புவனகிரி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கொளக்குடி பகுதியில் ரூ.47.10 இலட்சம் மதிப்பீட்டில் கொளக்குடி முதல் பாதிரிமேடு வரை 1.200 கி.மீ நீளத்திற்கான சாலை மேம்பாட்டுப் பணியினையும், பரங்கிப் பேட்டை ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கீழ்னுவம்பட்டு பகுதியில் ரூ.97.30 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்னுவம்பட்டு முதல் கோவிலாம்பூண்டி வரை 1.550 கி.மீ நீளத்திற்கான சாலை மேம்பாட்டுப் பணியினையும், கீரப்பாளையம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கூளப்பாடி பகுதியில் ரூ.88.03 இலட்சம் மதிப்பீட்டில் 1.410 கி.மீ நீளத்திற்கான சாலை மேம்பாட்டுப் பணியினையும், காட்டுமன்னார்கோயில் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கீழ்பூவிழந்த நல்லூர் முதல் பெரியகோட்டகம் வரைரூ.157.06 இலட்சம் மதிப்பீட்டில் 3.000 கி.மீ நீளத்திற்கான சாலை மேம்பாட்டுப் பணிகளையும் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் தொடக்கி வைத்தார்.

வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்தாவது:-

முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2022-23 ஆம் ஆண்டிற்கு கடலூர் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித் துறையின் வாயிலாக 183 சாலைப் பணிகளுக்கு 261.673 கி.மீ நீளத்திற்கு ரூ.12164.41 இலட்சம் மதிப்பீட்டில் சாலைப் பணிகள் நடைபெற உள்ளன. இத்திட்டத்தின் கீழ் துவங்கப்படும் சாலைப் பணிகள் மூன்று மாத காலத்திற்குள் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர துறைசார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும், இக்கிராமங்களில் பல்வேறு திட்டங்களின் வாயிலாக நடைபெறும் சாலைப் பணிகள் மற்றும் பல்வேறு உட்கட்டமைப்பு மேம்பாடுப் பணிகளில் அத்தியாவசிய பணிகளுக்கு முன்னுரிமை அளித்து துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் இணைந்து குறிப்பிட்ட காலகெடுவிற்குள் முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வில், கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், கடலூர் மேயர் சுந்தரி ராஜா, கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) / திட்ட இயக்குநர் .லி.மதுபாலன், உதவி ஆட்சியர் சுவேதா சுமன், முன்னாள் எம்.எல்.ஏ., மருதூர் இராமலிங்கம், ஒன்றிய கழக செயலாளர்கள் அ.முத்துசாமி, வி.சிவகுமார், ப.இராமலிங்கம், முத்து. பெருமாள், ஆர்.கலையரசன், கே.ஆர்.ராயர், தெ. காசிராஜன், பி. சுப்ரமணியன், கே.ஆர். தனஞ்செயன், ஆர்.நாராயணசாமி, டாக்டர் எம். மனோகரன், ஏ.எஸ்.மதியழகன், வி.ஜி.பி.சபாநாயகம், டி.திருமூர்த்தி, வி.கோவிந்தசாமி, த.சங்கர், நளன்புத்தூர் நடராஜன், வி.ஆர். ராஜேந்திகுமார், எம். சோழன், இர.விஜயசுந்திரம், பி.சுந்தரபாண்டியன், இரா.கலையரசன், வி. கோவிந்தசாமி, மாநகர கழக செயலாளர் கே.எஸ். ராஜா, பொதுக்குழு உறுப்பினர்கள் கே.பி.ஆர்.பாலமுருகன், ஞானசேகரன், த. ஜேம்ஸ் விஜயராகவன், வடலூர் நகரமன்றத் தலைவர் சிவக்குமார், நகர கழக செயலாளர்கள் கே.ஆர்.செந்தில்குமார்,த.தமிழ்ச்செல்வன்,

பேரூர் கழக செயலாளர்கள் த.கந்தன், ப.மனோகரன், எஸ்.கணேசமூர்த்தி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜி.கார்த்திகேயன் உள்ளிட்ட அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### திருவாரூரில் கலைஞர் கோட்டம் திறப்பு விழா!

# மாநகரக் கழகத் தோழர்கள் திரளாகப் பங்கேற்பீர்!

## மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

மதுரை, ஜூன் 20-

திருவாரூர் கலைஞர் கோட்டத் திறப்பு விழாவில் மதுரை மாவட்டக் கழகத் தோழர்கள் திரளாளகப் பங்கேற்குமாறு மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. கேட்டுக்கொண்டுள்ளார்.



இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முத்தமிழறிஞர் கலைஞர் கோட்டத் திறப்பு விழா இன்று (20.06.2023 - செவ்வாய்க்கிழமை) காலை 10 மணிக்கு கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலையை திறந்து வைத்து விழா தலைமை உரையாற்றுகிறார். தமிழினத் தலைவர் கலைஞர் கோட்டத்தினை பீகார் மாநில முதலமைச்சர் நிதிஷ் குமார் திறந்து வைத்து விழாச் சிறப்புரையாற்று கிறார். பீகார் மாநில துணை முதலமைச்சர் தேஜஸ்வி யாதவ் அவர்கள் முத்துவேலர் நூலகத்தை திறந்து வைக்க உள்ளார்கள்.

மேற்கண்ட நிகழ்ச்சியில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிக் கழக, வட்டக் கழகச் செயலாளர்கள், ஒன்றிய, பேரூர், கிளை கழக செயலாளர்கள், அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் பெருந்திரளாக தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

இவ்வாறு கோ.தளபதி எம்.எல்.ஏ. தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### நெல்லை மாநகரத்தில்

# இளைஞர் அணி பொறுப்புகளுக்கு விண்ணப்பித்தல்!

## மாநகரச் செயலாளர் சுப்பிரமணியன் வேண்டுகோள்!

நெல்லை, ஜூன் 20-

நெல்லை மாநகர இளைஞரணி பொறுப்புகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் வருகின்ற 27.06.2023 மாலைக்குள் மாவட்ட கழக அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும் என நெல்லை மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுடைய அறிவுறுத்தலின்படி, மாநில இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நெல்லை மாநகர தி.மு.க. இளைஞரணி 4 பகுதிகளில் உள்ள இளைஞரணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பப் படிவத்தை பகுதி செயலாளர்கள் ஒப்புதலுடன் நெல்லை மாநகர அலுவலகத்தில் விண்ணப்ப படிவுகளை பெற்று அதனை பூர்த்தி செய்து உரிய ஆவணங்களுடன் வருகின்ற 27.06.2023 அன்று மாலை 5 மணிக்குள் மாவட்டக் கழக அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு தச்சை பகுதி செயலாளர் பூ.சுப்பிரமணியன்,

நெல்லை பகுதிச் செயலாளர் நமச்சிவாயம் என்ற கோபி, பாளை பகுதிச் செயலாளர் அன்டன் செல்லதுரை, மேலப்பாளையம் பகுதிச் செயலாளர் சாகுல் ஹமீது, நெல்லை மாநகர துணை செயலாளர் அப்துல் கையூம், ஆகியோரை அணுகலாம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



நெல்லை கிழக்கு மாவட்டம் அம்பாசமுத்திரம் நகர தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் ஆலோசனைப்படி அம்பாசமுத்திரம் முகைதீன் பாத்திமா பள்ளியில் 400 மாணவ - மாணவிகளுக்கு நோட்டு புத்தகம் மற்றும் மரக்கன்றுகள் நடும் நிகழ்வு நகர செயலாளர் கே.கே.சி.பிரபாகரன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன் பங்கேற்று நோட்டு, புத்தகங்களை வழங்கினார். நிகழ்வில் அண்ணாதுரை, ராதாகிருஷ்ணன், சிவசுப்பிரமணியன்,பேச்சி கனியம்மாள்,பேச்சியம்மாள் கோதர்இஸ்மாயில்,ஜோதிகலா, சிங்கநாதன்,சண்முகவேல், ராமையா,அமானுல்லா,சுடலை குமார்,வனராஜ்,தங்கம், சண்முகசுந்தரம்,முத்துராஜ், விஜயகுமார்,உள்பட பலர் கலந்து கொண்டனர்.



தென்காசி தெற்கு மாவட்டம் செங்கோட்டை ஒன்றியம் பகுதிகளில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 3 இடங்களில் கழக கொடியேற்றும் நிகழ்வு ஒன்றிய செயலாளர் ரவிசங்கர் தலைமையில் தலைமை பொதுக்குழு உறுப்பினர் சாமிதுரை, தனுஷ் எம்.குமார் எம.பி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் பொ.சிவபத்மநாதன் பங்கேற்று கழக கொடியை ஏற்றி வைத்தார். உடன் சுந்தர மகாலிங்கம்,ஆறுமுகசாமி, வெங்கடேசன்,முத்து,கிருஷ்ணராஜா, ஸ்ரீதர்,பொன்.செல்வன்,முத்துக்குமார் மணிகண்டன்,சலீம்மாலிக்,சுரேஷ், வைரமணி,கோபால், விநாயகம் நம்பியார், சிவசுப்பிரமணியன், முருகேசன், மாடசாமி, ராமையா, சுப்ரமணியன், நல்லையா முதலியார், சிவனப்பா,சுப்ரமணியன்பிள்ளை உள்பட கழகத்தினர் கலந்து கொண்டனர்.